## கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்திச் செயற்றிட்டம் (கிராமிய நீர்க் கூறு) - 2015

---

கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் (கிராமிய நீர்க் கூறு) 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் (ஜேஐசீஏ) இடையே கைச்சாத்திடப்பட்ட 2010 மார்ச் 26 ஆந் திகதிய எஸ்எல்-பி 98 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4.08(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்றிட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்றிட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சாகவிருந்த தற்போதைய தேசிய திட்டமிடல் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயற்றிட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் கிழக்கு மாகாண சபை செயற்றிட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கிழக்கு மாகாணத்தில் நீர் வழங்கல் வசதிகளை நிர்மாணித்து விரிவுபடுத்துவதன் மூலம் பாதுகாப்பான குடிநீரினை வழங்கி அதன் மூலம் பிரதேசத்தில் வாழ்க்கைத் தரங்களை முன்னேற்றி வறுமையைக் குறைப்பதற்கு பங்களிப்பதே செயற்றிட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் யப்பானிய யென் 6,054 மில்லியன் தொகையானதுடன் அதில் யப்பானிய யென் 4,904 மில்லியன் தொகையை யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், ரூபா 1,176 மில்லியனுக்குச் சமமான யப்பானிய யென் 924 மில்லியன் செயற்றிட்டத்தின் கிராமிய நீர்க் கூறுக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந் நோக்கத்திற்காக ரூபா 972 மில்லியனுக்குச் சமமான யப்பானிய யென் 764 மில்லியனை யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பட்டுள்ளது. செயற்றிட்டம் அதனது நடவடிக்கைகளை 2010 மார்ச் 26 ஆந் திகதி தொடங்கியதுடன் 2013 திசெம்பர் அளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டது. பின்னர் செயற்றிட்டக் காலம் 2015 யூலை 23 வரை நீடிக்கப்பட்டது. இருப்பினும், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்றிட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்றிட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது

அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

--------------------------

### 2.1 அபிப்பிராயம்

----------------------

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஒதுக்கீடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | யப்பானிய யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன். | ரூபா மில்லியன் | யப்பானிய யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 764 | 972 | - | - | 857 | 1,180 |
| ஜீஓஎஸ்எல் | 160 | 204 | 10.94 | 10.94 | 177 | 242 |
| **மொத்தம்** | **924** | **1,176** | **10.94** | **10.94** | **1,034** | **1,422** |

### 3.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள 24 கிராமிய நீர் வழங்கல் திட்டங்களின் கீழான செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புல்மோட்டை நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் சிவில் வேலைகள் மற்றும் குழாய்களை வழங்கி பொருத்துவற்காக 2012 இல் ரூபா 152.93 கிரயத்தில் வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தம் 2015 பெப்ரவரி 02 ஆந் திகதி பூரணப்படுத்தப்பட்டு தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. புல்மோட்டை நீர் வழங்கல் திட்டத்தின் நிர்வாக ஒப்பந்தம் மீது முன்னைய ஆண்டிற்காக வழங்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு 2015 திசெம்பர் 31 வரையிலும் போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(i) ரூபா 914,375 கிரயத்தில் புல்மோட்டை கொக்கிளாய் வீதியினூடாக இடப்பட்ட 1100 மீற்றர்கள் நீளத்துடனான பீவீசி குழாய்களின் சேதங்களின் திருத்தம்

(ii) நீரின் குறைவான தரத்தினால் பயன்படுத்தப்படாதிருந்த நீர் சுத்திகரிப்பு முறைமைக்கு நீர்ப்பாய்ச்சல் நோக்கத்திற்காக யான்-ஓயாவில் நிர்மாணிக்கப்பட்ட 03 குழாய் கிணறுகளில் 02 குழாய் கிணறுகளின் பயன்பாட்டிற்காக மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், முறையான சாத்தியவளக் கற்கைகளை மேற்கொள்ளாமல் உரிய கிணறுகளின் நிர்மாணத்தினால் அதற்காக செலவிட்ட ரூபா 2.10 மில்லியன் தொகை பயனற்றதாகவிருந்தது. மேலும், குழாய் கிணறுகளை நிர்மாணிப்பதன் மூலம் புல்மோட்டை பகுதியில் 3,500 குடியிருப்பாளர்களிற்கான நீர் வழங்கல் உரிய குழாய் கிணறுகளின் செயற்பாடுகளின் தவறுதல்கள் காரணமாக ஒரு நாளைக்கு 02 மணித்தியாலங்கள் மாத்திரமென வரையறுக்கப்பட்டிருந்தது என 2016 யூன்

மாதத்தில் கணக்காய்வாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கள விஜயத்தின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) எனது முன்னைய அறிக்கையில் குறிப்பிட்டதன் பிரகாரம், ரூபா 149.45 மில்லியன் கிரயத்தில் அமுல்படுத்தப்பட்ட பதவிஸ்ரீபுர நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் சுத்திகரிக்கப்பட்ட நீரினை வழங்குவதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததால் பதவிஸ்ரீபுர பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் மக்கள் நீண்டகால சிறுநீரக நோயால் அதிகளவில் பாதிக்கப்பட்டிருந்தனர். நீர்ப்பாசன கிணற்றிலிருந்து சுத்திகரிக்கப்படாத நீர் நேரடியாக வீடுகளிற்கு விநியோகிகப்பட்டு வருகின்றமை வேலைத்தள விஜயங்களின் போது அவதானிக்கப்பட்டதுடன் பதவிஸ்ரீபுர பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற குடிநீரை கொள்வனவு செய்வதற்கு இப் பிரதேசத்திலுள்ள மக்கள் மேலதிக கிரயங்களை செய்யவேண்டியிருந்தனர்.

(இ) மட்டக்களப்பு மாவட்டத்தில் குளவினமடு, தந்தமலை உப செயற்திட்டங்களின் கீழ் ரூபா 27 மில்லியன் கிரயத்தில் 2012 இல் வழங்கப்பட்டிருந்த சிவில் வேலைகள் ஒப்பந்தமானது ஒப்பந்தகாரரின் மந்தமான செயலாற்றல் காரணமாக 2013 இல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. பின்னர் ஒப்பந்தம் ரூபா 10.95 மில்லியன் கிரயத்தில் வேறு ஒப்பந்தகாரருக்கு மீளவழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒப்பந்தத்தை வழங்குதற்கு முன்னர் ஒப்பந்தகாரரின் இயலுமை மற்றும் கடந்தகால அனுபவம் என்பன ஆராயப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், உத்தரவாத முறியினை அதன் செல்லுபடியாகும் காலத்திற்குள் காசாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததால் ஒப்பந்தகாருக்கு செலுத்தியிருந்த ரூபா 586,141 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணத்தை 2015 திசெம்பர் 31 வரையிலும் அறவிட முடியாதிருந்தது.

(ii) மேலும், ரூபா 977,509 பெறுமதியான வேலைத்தளத்திலுள்ள மூலப்பொருட்கள் ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்ட காலத்தில் செயற்திட்டத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டதுடன் ஒப்பந்த உடன்படிக்கையில் இது தொடர்பில் நிதி ஏற்பாடுகள் போதாமை காரணமாக இதற்காக ஒப்பந்தகாரருக்கு எதிராக செயற்திட்டம் நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது.

(ஈ) மட்டக்களப்பு மாவட்டத்தில் கரடியனாறில் அமுல்படுத்தப்பட்ட நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் ரூபா 20.91 மில்லியன் மொத்தக் கிரயத்தில் செயற்திட்டத்தால் நிர்மாணிக்கப்பட்ட 02 குழாய்க்கிணறுகள், நீர்த் தொட்டிகள், நீர்ப்பாய்ச்சும் இயக்கி நிலையங்கள் போன்றன 2015 திசெமபர் 31 வரை விளைவற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

3.4 **செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்துதல்**

---

கடன் வழங்கும் முகவரின் நிதி ஒழுங்குகள் 2015 யூலை 23 இல் உள்ளவாறு முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், முடிவுறுத்தல் கணக்குகளை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.